**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC No. 03 / 2024** |
| **Deposition of witness for** | **:** | **PW : 3** |
| **Name** | **:** | **திரு. தயாநிதி** |
| **Father's Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **30.01.2026**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் மதுரை பைகாராவில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். அசா1 எனது மகள், அசா2 எனது மனைவி. ஆஜர் எதிரி எனது மருமகன். எனது மூத்த மகள் அசா1ஐ ஆஜர் எதிரிக்குத் திருமணம் செய்து கொடுத்தோம். அசா1க்கும், ஆஜர் எதிரிக்கும் ஒரு ஆண், ஒரு பெண் பிள்ளைகள் உள்ளார்கள். எனது பேரப்பிள்ளைகளை நாங்கள் தான் பராமரித்து வருகிறோம். என் மகள் அசா1 சூர்யா என் வீட்டில் தான் எங்கள் பராமரிப்பில் உள்ளார். சுமார் 3,4 வருடங்களுக்கு முன்பு, சாயந்திரம் 06.00 மணிக்கு மேல், நான் என் வீட்டில் உட்கார்ந்து TV பார்த்துக் கொண்டிருந்தேன். என்னோடு என் கொழுந்தியாள், எங்கள் பக்கத்து வீட்டுக்காரர்களும் எங்கள் வீட்டில் TV பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது ஆஜர் எதிரி தண்ணீ போட்டுவிட்டு வந்து, என் மகள் அசா1 உடன் சண்டை போட்டுக்கொண்டிருந்தார். நான் சென்று சண்டையை விலக்கிவிட்டேன். அதில் எனது சட்டைக் கிழிந்து விட்டது. அதன் பின் எதிரி வீட்டிற்குச் சென்றுவிட்டார். மீண்டும் 10 நிமிடத்தில் எதிரி வீட்டிற்குச் சென்று கத்தி எடுத்துவந்து, சூர்யாவை வலது தலைப் பகுதியில் கத்தியால் தாக்கி காயத்தை ஏற்படுத்திவிட்டார். அதைத் தடுக்கச் சென்ற எனது மனைவியையும் அதே கத்தியால் எதிரி வெட்டினார். அதில் எனது மனைவிக்கு இடது முழங்கைக்கு கீழ் காயம் ஏற்பட்டது. நான் தடுக்கப் போனபோது, இடது உள்ளங்கையில் பெருவிரலுக்குக் கீழ் காயம் ஏற்பட்டது. பக்கத்தில் இருந்த மரியரூபி தடுக்கப் போன போது, அவரையும் எதிரி தாக்கினார். ஏன்டீ தேவிடியா என்று என் மகளை எதிரி ஆபாசமாகத் திட்டினார். மூனுபேர் சாவும் என் கையில் தான் என்று மிரட்டிவிட்டுச் சென்றார். காயம்பட்ட நாங்கள் அனைவரும் லெட்சுமணா மருத்துவமனைக்குச் சிகிச்சைக்குப் போனோம். அங்கு வைத்து என் மகள் அசா1 புகார் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் கத்தி தான் எதிரி சம்பவத்தின் போது பயன்படுத்தியதாகும். அந்த கத்தி அசாபொ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.01.30 16:09:20 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை